# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 11/2015 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திருமதி. குசலகுமாரி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

A1 absent u/s. 317 Cr.P.C PFA. A2, A3 present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of July 2023.

நான் செல்வநகர் காலணியில் வசித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய கணவர் ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுகாரர்கள். கடந்த 07.04.2014 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் எனது மகனை சந்திரபோஸ் அடித்துவிட்டார். அதை எனது மகன் அ.சா.1 க்கு போன் செய்து சொன்னான். அதனால் எனது கணவர் 1வது எதிரியிடம் தட்டி கேட்டுவிட்டு அவருடைய டிவிஎஸ் எக்ஸல் வண்டியில் திரும்ப வரும் போது எங்கள் ஊரில் உள்ள டிரான்ஸ்பார்மர் அருகில் வைத்து காலை 07.30 மணியளவில் எனது கணவரை வசந்தி, சந்திரபோஸ், குமார், முத்துவேல் ஆகியோர்கள் கம்பு மற்றும் கம்பியால் அடித்தார்கள். யார்யார் எதை வைத்து அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது.

அதனால் எனது கணவருக்கு தலை, கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டது. எனது மகன் ரேஷன் கடைக்கு போய்விட்டு வரும் போது முத்துவேல் கம்பியால் இடதுகை மணிகட்டில் அடித்தார். மேற்படி சம்பவம் நடந்து அலறல் சத்தம் கேட்டு நானும், எனது அப்பாவும் சம்பவ இடத்திற்கு வந்து கேட்ட போது குடும்பத்தை அழித்து விடுவதாக முத்துவேல் தெரிவித்தார். பின்னர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

சிகிச்சையில் இருந்த மறுநாள் போலிசார் வந்து விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்கள் அதில் நானும் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன் அந்த அறிவேன் சாட்சி கையெழுத்து **<u>அ.சா.ஆ.2</u>** ஆகும். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 11/2015 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. விஜயகுமார் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

A1 absent u/s. 317 Cr.P.C PFA. A2, A3 present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of July 2023.

நான் செல்வநகர் காலணியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். வழ்க்கின் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுகாரர்கள். வருடம் ஞாபகமில்லை ஏப்ரல் மாதம் 07 ஆம் தேதி எங்கள் ஊரில் உள்ள டிரான்ஸ்பாம் அருகில் காலை 07.30 மணியளவில் நானும், எனது மகன் புஷ்பகாந்த் எனக்கு சொந்தமான TN 72 7522 என்ற பதிவெண் கொண்ட எக்ஸ்எல் வண்டியில் வந்து கொண்டிருந்த போது வழக்கின் எதிரிகள் மற்றும் முத்துவேல் ஆகியோர்கள் எங்களை வழிமறித்து கம்பி மற்றும் கட்டையால் எங்களை அடித்தார்கள்.

4நபர்களும் சேர்ந்து அடித்ததால் யார் யார் எங்கு அடித்தார்கள் என்று தெரியாது. அடித்ததில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டேன். எனது மகனுக்கு இடது கை மணிகட்டில் காயம் ஏற்பட்டது. மேற்படி சத்தம் கேட்டு எனது மனைவி குசலகுமாரி மற்றும் மாமனார் கருப்பையா அந்த இடத்திற்கு வந்தார்கள். பின்னர், எனக்கு வந்த இரத்தத்தை துடைத்துவிட்டு ஒரு ஆம்னிக்கு தகவல் தெரிவித்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

சம்பவம் நடந்தவுடன் 10 நமிடத்தில் உதவி ஆய்வாளர் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் இருந்த ஜெஸிஸ் உதயராஜ் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். மறுநாள் அவர் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலத்தில் எனது மனைவியும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக

விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.